2003 மார்ச் 24]

ஆண்டுக்கு பல இலட்சம் ரூபாய் வருவாய் தரும் இப்படிப்பட்ட தென்னை மரங்கள் தமிழகத்தின் வடபகுதிகளில், வேலூர் மாவட்டத்தில் அதிகம் உள்ளன. குடியாத்தம் விவசாயிகளில் 80 சதவீதம் பேர் தென்னை வைத்திருக்கிறார்கள். இந்த மரங்கள் எரியோபைட் பூச்சியால் தாக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டம் அடைந்திருப்பதைக் கவனத்தில் கொண்டு, அவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ள வழங்கப்படும் மானியத் தொகையை அரசு உயர்த்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரியோபைட் சிலந்தி காற்றின் மூலம் பரவுகிற ஒரு நோய். இதனை முழுமையாகக் கட்டுப்படுத்த இதுவரை மருந்து எதுவும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்ற முறையில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 51, திரு. எம். ராம்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

51—

பாலர் பள்ளி

***6717—திரு. எம். ராம்குமார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், மஞ்சமாவடி கிராமத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. எம். ராம்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்கு உட்பட்ட கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் கொரநாட்டுக்கருப்பூர் ஊராட்சிலே உட்கிராமமாக இருக்கின்ற இந்த மஞ்சமாவடி கிராமம் ஏறக்குறையை 750 பேர்கள் மக்கள்தொகை

கொண்ட குக்கிராமமாகும். அந்தக் கிராமத்திலே இருக்கின்ற குழந்தைகள் பாலர் பள்ளிக்கு வருவதற்கு கருப்பூர் ஊராட்சிக்கு வருவது என்று சொன்னால், கிட்டத்தட்ட 2½ கிலோ மீட்டர் தூரம் நடந்து வரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஏழை எளிய விவசாய கூலித் தொழிலாளர்களுடைய குழந்தைகள் பயிலுவதற்கு அந்த மஞ்சமாவடி கிராமத்திலே புதிதாக பாலர் பள்ளி துவங்குவதற்கு மறுபரிசீலனை செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர், மஞ்சமாவடி கிராமத்தில் மொத்தம் மக்கள் தொகை எண்ணிக்கை 104 ஆக இருப்பதாலும், பயனாளிகளின் எண்ணிக்கை 13 ஆக இருப்பதாலும் அரசு அறிவித்திருக்கின்ற விதிகளின்படி மேற்படி கிராமத்தில் புதிய பாலர் பள்ளி அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கருத்துரு பெறப்பட்டிருக்கிறது.

மஞ்சமாவடி கிராமத்தில் மையம் தொடங்குகின்ற நேரத்தில் வருகை தருகின்ற குழந்தைகளின் எண்ணிக்கைக் கணக்கு 6 ஆக கருத்துரு பெறப்பட்டிருக்கிறது. இக்கிராமத்தில் பாலர் பள்ளி அமைப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய் செலவாகும். மேற்படி தொகுதியில் ஏற்கெனவே 154 பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் 63 பாலர் பள்ளி மையங்கள் இயங்கி வருகின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்த மஞ்சமாவடி கிராமத்தில் மக்கள் தொகையைக் கணக்கிலே கொண்டு சிறப்புக் கவனம் செலுத்தி அமைக்க வேண்டுமென்று விரும்பினால் அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, அவர்களுடைய தொகுதியில் பள்ளியை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்துகொள்வதற்கு அரசு துணையாக நிற்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52, திரு. மா. சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.